14.07.2026.

O.S.No. 103/2015

DW1–குழலி – த/பெ. சுப்பையா நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( வாதி தரப்பில்)

6. எனது பெற்றோரின் வாரிசுசான்றிதழை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதின் அடிப்படையில் தான் எனது பெற்றோர் இறந்தபிறகு அவரது வாரிசுதாராக உங்களை இந்த வழக்கில் வாதி தரப்பினராக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள நபர்களை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் வாதி கட்சி சேர்த்துள்ளார் என்றால் சரிதான்.

7. வாதி தரப்பு ஆவணங்களை நான் நகல் எடுத்துப்பார்க்கவில்லை. நான் நகல்எடுத்து பார்க்கவில்லை என்பதால் எனது பெற்றோர்களின் செயல்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அங்கன்வாடியில் ஆசிரியராக பணிபுரிந்துவருகிறேன்.

8. நான் தென்காசி ஆயுள் காப்பீடு கழகத்தில் ஒரு காப்பீட்டு செலுத்திவருகிறேன் என்றால் சரிதான். எனது பிறந்த தேதி 19.05.1978. மேற்படி தேதி தான் எனது பணிப்பதிவேட்டிலும் உள்ளது. எனது வங்கிகணக்கு புத்தகத்திலும், வாக்காளர் அடையாள அட்டையிலும், Pan card லும் இதே தேதி தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறாக உள்ளது. மேற்படி ஆவணங்களில் 03.05.1980 என்று உள்ளது.

9. நான் ஒவ்வொரு ஆவணத்தையும் ஒவ்வொரு பிறந்த தேதியை குறிப்பிட்டு, அதைபோல் நான் எனது வழக்கிலும் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஆதார் அட்டையில் எனது பிறந்ததேதி 12.06.1980 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. வாதிகளுக்கும், எனது பெற்றோர்களுக்கும் எந்த வித பிரச்சனையும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள 18 ஆவணங்களும் எனதுபெற்றோர்கள் இறந்தபிறகு தயார் செய்யப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான்.

11. நான் தாக்கல் செய்த முதல்விசாரணை உறுதிக்கூற்றில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்,அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். அதில் பக்கம் எண்.3 ல், 4 வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான்.

12. ஜபாருல்லாகானுக்கும், எனது சித்தாப்பா துரைராஜ்க்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். துரைராஜ்ம் எனது தந்தையும் ஒரே வீட்டில்தான் குடியிருந்துவந்தார்கள் என்றால் சரிதான். துரைராஜ் திருமணமாகமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். துரைராஜ் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது.

13. போலியான ஆவணங்கள் வாதி உற்பத்தி செய்துள்ளார் என்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

14. எனது பெற்றோருக்கும், இடைகால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் எந்தபகையும் கிடையாது என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் சாமிநாடார். வா.சா.ஆ.7 ஆவணம் உண்மையான ஆவணமா என்றால் உண்மையான ஆவணம்தான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் எனது சித்தப்பா கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

15. வா.சா.ஆ.7,8 ஆவணங்கள் இடைகால் சார்பதிவளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்றும், எங்கள் வீட்டில் வைத்து எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7,8 ஆவணங்கள் வீட்டில்வைத்து கையொப்பம் தான் செய்தார்கள், என் பெற்றோர் அதில் ஒரு கையொப்பம் மட்டும் தான் செய்துள்ளார்.

16. இந்த வழக்கில் வாதிகள் இடைகால் சார்பதிவாளரை விசாரிக்க மனு செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான், சார்பதிவாளரை அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பி.வா.சா.ஆ.7 ல் உள்ள 2,3 வது வழக்கறிஞர்களை எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணம் மோசடியான ஆவணம் என்பது அதில் உள்ள 2,3 வது வழக்கறிஞர்கள் அந்த ஆவணம் ஏற்பட்ட தேதியில் வழக்கறிஞர்களே இல்லை என்றால் சரியல்ல. அதைபோல் பி.வா.சா.ஆ-7 ஆவணத்தில் உள்ள வழக்கறிஞர்கள் அலுவலகம் அந்த இடத்தில் அந்த நேரத்தில் இல்லை என்றாலும், தற்போதுதான் அங்கு அலுவலகம் உள்ளது என்றாலும் சரியல்ல.

17. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வீடு இடியவில்லை என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜபாருல்லாகான் மீது A.R.S.ராமலிங்கம் கொடுத்த வழக்கு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் இது தொடர்பான எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருந்தால் எனக்கு அதுபற்றி தெரியாது.

18. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து வாதிக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக போலியான ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.இந்த வழக்கில் நான் எதிர்கோரிக்கை வைத்துள்ளேன் என்றால் வைத்துள்ளேன்.

19. எனது எதிர்வழக்குரையில் எதிரிடை அனுபவம் மூலம் பிராதுதபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் தாவா சொத்துக்கான தீர்வைரசீது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் வாதிகளால் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள தீர்வைரசீதுகளில் வாதியின் பெயர்தான் உள்ளது என்றால்
**(கட்டளை 18, விதி 12ன்–கீழ் சாட்சியிடம் எந்த ஆவணத்தை கொடுத்தாலும் அதை வாங்கமறுத்துவிட்டு, அந்த ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லைபோலியான ஆவணம் என்று மீண்டும், மீண்டும் கூறிவந்தார். மேற்படி நடத்தை பதிவு செய்தபின்பு சாட்சி ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு, அதுபிராது தபசில் சொத்திற்கான**

**பட்டா இல்லை என்று கூறினார். எனவே பட்டா குறியீடு செய்யப்படவில்லை. )**

20. என்னிடம் காட்டப்படும் கிளாங்காடு ஊராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணம் உண்மையான ஆவணம்தான் , மேற்படி ஆவணம் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**